# திருவள்ளுவர் விழாவை முன்னிட்டு

# மன்னாரில் இலக்கியப் போட்டிகள்

மன்னார் மாவட்ட செயலகத்தினால் விரைவில் நடாத்தப்படவுள்ள திருவள்ளுவர் விழாவினை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் பல்வேறு இலக்கியப் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ .ஸ்ரான்லி டி மெல் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையிலும் வழிகாட்டலுடனும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்தப் போட்டிகளில் மன்னார் மாவட்ட பாடசாலை மாணவர்கள், மாவட்ட கலை இலக்கியத்துறையினர் மற்றும் மாவட்டத்தில் பணியாற்றும் அரச உத்தியோகத்தர்கள் பங்குபற்ற முடியும்.

பாடசாலை மாணவர்கள், கலை இலக்கியத்துறையினர் மற்றும் அரச அலுவலர்கள் மத்தியில் திருவள்ளுவர் பற்றியும் திருக்குறள் பற்றியும் அறிதலையும் பயில்தலையும் மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்தப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

பேச்சு, திருக்குறள் மனனம் ஆகிய போட்டிகள் நிகழ்நிலை ( zoom செயலி ) வழியாக நடைபெறும். ஏனைய போட்டிகளான கட்டுரை, கவிதை, சிறுகதை, குறுநாடகப்பிரதியாக்கம், ஓவியம் ஆகியவற்றில் பங்குபற்றுவோர் தமது ஆக்கங்களை தபால் மூலமாகவோ அன்றி நேரிலோ “ மாவட்ட செயலாளர். மாவட்ட செயலகம் , மன்னார்” என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும்.

போட்டிகளின் விதிமுறைகள் அடங்கிய சுற்றறிக்கை சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சுற்றறிக்கையை மன்னார் மாவட்ட செயலக இணையத்தளத்தின் (www.mannar.dist.gov.lk) Download பக்கத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பான மேலதிக தெளிவுபடுத்தல்களுக்காக மன்னார் மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தன் அவர்களை 0775342441 என்ற இலக்கத்தில் தொடர்பு கொள்ளமுடியும்.